சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

பி.வா.சா. 3 நாள் : 07.01.2025

மேல்முறையீடு எண். 25/2022

பெயர் ராஜேஷ்குமார் த/பெ இரங்கசாமி

வயது தொழில் உதவி இயக்குநர், மீன்வளத்துறை

ஜாதி SC மதம் இந்து

கிராமம் தாலுக்கா

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை:**

நான் திருவாரூர் மீன்வளத்துறையில் உதவி இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். மயிலாடுதுறை மீன்வளத்துறை உதவி இயக்குநராக கூடுதல் பொறுப்பு வகிக்கிறேன். இந்த நீதிமன்றத்திலிருந்து சாட்சியமளிக்க சம்மன் வந்தது. சம்மனில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை எடுத்து வந்துள்ளேன். ஒருங்கிணைந்த நாகப்பட்டிணம் மாவட்டம் இருந்தபோதிலிருந்தே சீர்காழியில் மீன்வளத்துறை உதவி இயக்குநர் அலுவலகம் இயங்கிவருகிறது என்றால் சரி. எங்கள் அலுவலகம் மூலமாக எத்தனை வகையான மீன்வளர்ப்பிற்காக எங்கள் அலுவலகத்தில் மானியம் வழங்கப்படும் என்றால் கெண்டை மீன், ஜிலேபி மீன், கொடுவா மீன், விறால் மீன் ஆகியவை வளர்ப்பதற்கு மானியம் வழங்குவோம். அதில் மீன்குஞ்சுகள் வளர்ப்பதும் அடங்கும் என்றால் சரி. மீன்குஞ்சுகள் வளர்ப்பதற்கு விவசாயிகளை நாங்கள் தேர்ந்தெடுத்து அறிவிப்பு கொடுப்போம் என்றால் மீன்வளத்துறையில் Target fix செய்து யார் மீன் வளர்பிற்கு உகந்த நபர்களாக இருக்கிறார்கள் என்று அந்த இடத்தை பார்வையிட்டு அதன் பிறகு அவர்களை விண்ணப்பம் கொடுக்க சொல்வோம். அதுபோல் யார் யார் விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள் என்பதற்கு எங்கள் அலுவலகத்தில் கோப்பு பராமரிப்போம் என்றால் சரி. அந்த கோப்பை எடுத்து வந்துள்ளேனா என்றால் இல்லை. அது 8 Volume அதில் இந்த வழக்கு சம்பந்தப்பட்டது மட்டும் சம்மனில்

குறிப்பிட்ட படி எடுத்து வந்துள்ளேன். அந்த கோப்பை பார்த்தால் யார் யார் விண்ணப்பம் கொடுத்துள்ளார்கள் என்று தெரியும் என்றால் சரி. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு மீன்வளர்ப்பிற்கு தேவையான குளத்தை வெட்டிக்கொடுத்து மீன்குஞ்சு, அதற்கு தேவையான தீவனம், வலை, Oxygen cylinder, ஷெட் அமைத்து கொடுப்போம் என்றால் சரி. அரசு வழிகாட்டுதல் படி அவற்றை அமைத்து கொடுப்போம். அதற்கு எந்த தொகையும் விவசாயி கட்டத்தேவையில்லை என்றாலும் அவை மானியத்தில் கொடுக்கப்பட்ட பொருட்கள். அப்படி குளம் வெட்டிக்கொடுக்க சேகர் என்பவர் தான் ஒப்பந்தகாரர். சேகர் என்பவரின் சொந்த ஊர் தஞ்சாவூர் அவர் அப்பா பெயர் துரைசாமி. எங்கள் அலுவலகத்திற்கும் சேகருக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு அதன் மூலம் குளம் வெட்டிக்கொடுக்க அவர் பணிக்கப்பட்டார். நாங்கள் ( உதவி இயக்குநர் மற்றும் ஆய்வாளர்) சென்று குளம் வெட்ட வேண்டிய இடத்தை பார்வையிட்டு இந்த இடத்தில் குளம் வெட்டலாம் என்று சொன்னபிறகு JCB மூலம் சேகர் குளம் வெட்டுவார். அவ்வாறு குளம் வெட்டும்போது JCB க்கான Diesel allowance, Driver படிப்பணம் எதுவும் விவசாயிகள் கொடுக்கதேவையில்லை. அப்படி குளம் வெட்டும்போது நாங்களும் வாரம் ஒரு முறை போய் பார்வையிடுவோம். குளம் வெட்டும் சேகரும் எங்களுக்கு Daily status பற்றி அவ்வப்போது சொல்வார். அப்படி குளம் வெட்டுவதற்கு எத்தனை மணிநேரத்திற்கு அவருக்கு Allowance கொடுக்கப்படும் என்றால் சரியாகத்தெரியவில்லை. File ஐ பார்த்தால் தான் தெரியும். இந்த பிரதிவாதி சிவக்குமார் சம்பந்தப்பட்ட File எதுவும் எங்கள் அலுவலகத்தில் இல்லை. அவர் பயனாளி இல்லை. அவர் ஏற்கனவே வெட்டியிருந்த குளத்திற்கு மானியம் கோரினார். எங்கள் scheme படி புதிய குளம் தான் வெட்டமுடியும். வெட்டிய குளத்திற்கு மானியம் கொடுக்கமுடியாது. பிரதிவாதி சிவக்குமார் நிலத்தை உதவி இயக்குநர் மற்றும் ஆய்வாளர் ஆகியோர் பார்வையிட்டார்கள் என்றால் சரி. மேற்படி விவரத்தை ஏற்கனவே இருந்த உதவி இயக்குநர் மற்றும் ஆய்வாளர்

02-07-11/15

ஆகியோரிடம் போன் மூலம் கேட்டு தெரிந்து கொண்டேன். விண்ணப்பம் இருந்தால் தான் விவசாயியின் நிலத்தை பார்வையிடுவோம் என்றால் விண்ணப்பம் இருந்தாலும் போவோம் இல்லாவிட்டால் போனில் சொன்னாலும் போகும் வழியில் அந்த இடம் இருந்தால் போவோம். பிரதிவாதியின் இடத்தை விண்ணப்பம் போட்டதன் அடிப்படையில் உதவி இயக்குநர் மற்றும் ஆய்வாளர் ஆகியோர் பார்வையிட்டார்களா அல்லது போன் மூலம் சொல்லி பார்வையிட்டார்களா என்று எனக்கு தெரியாது என்றால் சரி. ஒப்பந்தகாரர் குளம் வெட்டியபிறகு அதற்கான பில் கொடுத்த பிறகு அதற்கான பணத்தை Grant செய்வோம் என்றால் சரி. அதில் விவசாயியின் கையொப்பம் இருக்கும் என்றால் இருக்காது. அந்த பணம் விவசாயி Account ற்கு போகாது. ஒப்பந்தகாரர் Account ற்குதான் போகும். 2019 ம் ஆண்டு மீன்குஞ்சு வளர்ப்பதற்கு எத்தனை விவசாயிக்கு மானியம் கொடுக்கப்பட்டது என்றால் ஒரு விவசாயிதான் target ஒரு விவசாயிக்கு தான் கொடுக்கப்பட்டது. 2019 ம் வருடத்தில் ஜெயலெட்சுமி என்பவருக்கு மானியம் கொடுக்கப்பட்டது. அதற்கான ஆவணம் எடுத்து வந்துள்ளேன். **திருமதி. ஜெயலெட்சுமி, க/பெ. பாலசுந்தரம் என்ற பயனாளிக்கு திருவாளி கிராமம், சீர்காழி, சர்வே நம்பர் 70/2ல் மீன்வளர்ப்புக்குளம் அமைக்கப்பட்டதற்கான பட்டியல் சம்பந்தப்பட்ட கடிதத்தின் உண்மை நகல் (ஜெராக்ஸ்) Ex. X1** ஆகும். மேற்படி ஜெயலட்சுமிக்கு குளம் வெட்டிக்கொடுத்தது சேகர் என்ற ஒப்பந்தகாரர் என்றால் சரி. எத்தனை பயனாளிகள் விண்ணப்பித்தார்கள் என்பதை File ஐ பார்த்தால் தான் சொல்லமுடியும். அப்படி விண்ணப்பித்தவர்களில் ஜெயலெட்சுமி பயனாளியாக தேர்வு செய்யப்பட்டார். அந்த file ஐ எடுத்து வந்தால் பிரதிவாதி சிவக்குமார் விண்ணப்பித்துள்ளாரா என்று தெரியவரும் என்றால் சரி. அதற்கான File எங்கள் அலுவலகத்தில் உள்ளது என்றால் ஆமாம். பிரதிவாதி சிவக்குமார் நிலத்தில் எங்கள் அலுவலகத்தின் மூலம் ஒப்பந்தகாரர் சேகர் என்பவர் மீன் வளர்க்க குளம் வெட்டிக்கொடுத்தார் என்றால் இல்லை. பிரதிவாதி சிவக்குமார்

ஒ.ர. [signature]

விண்ணப்பிக்கவில்லை அவர் பயனாளி இல்லை. 2019 ம் வருடத்திற்கான 8 volume கொண்ட File உள்ளதா என்றால் ஆமாம். அந்த File ஐ ஆய்வு செய்தால் யார் பயனாளி என்றும் யார் விண்ணபித்தார்கள் என்று தெரியும் என்றால் சரி. அந்த file களை பார்த்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் நான் 8 Volume கோப்புகளையும் எடுத்துவரவில்லை என்றால் சரியல்ல. 2019 ம் ஆண்டு எங்கள் அலுவலுகத்தில் பணிபுரிந்த அலுவலர்களின் அஜாக்கிரதையால் தான் பிரதிவாதி சிவக்குமாருக்கு கிடைக்க வேண்டிய மானியத்தொகை கிடைக்கவில்லை என்றாலும் அப்போது பணிபுரிந்த அலுவலர்கள் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இப்போதும் சேகர் எங்கள் ஒப்பந்தகாரர் என்றால் இல்லை. ஒரு வருடத்திற்கு அவருடன் அக்ரிமெண்ட் போடப்பட்டிருந்தது.

(அந்த 8 Volume கோப்புகளையும் எடுத்து வர மூன்று நாட்கள் கால அவகாசம் வேண்டும்) மேற்படி 8 Volume கோப்புகளையும் எடுத்து வரவும் முதல் விசாரணையின் தொடர்சிக்காவும் ஒத்தி வைக்கப்படுகிறது)

ஒ.ப. ந 7/1/25

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

7/1/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

07-1.25